**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.83/மா/2025
நாள் 08.10.2025

| | |
|---|---|
| திரு . S. அன்பழகன்<br>துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>காஞ்சிபுரம் மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் S. அன்பழகன் என்பவரின் 23.12.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 26.12.2023 அன்று பெறப்பட்டு 83/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் S. அன்பழகன் என்பவர் தனது 23.12.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தை ஆய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடத்தை அகற்ற வேண்டி, நான் கடந்த 23.02.2023 இல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் அனுப்பி, அதன் நகலை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் அனுப்பினேன். (இந்த புகாரின் நகல் இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு இணைத்து அனுப்பப்படுகிறது) நான் 23.02.2023 இல் அனுப்பிய புகாரை பெற்றுக் கொண்டதாக மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து ஒப்புகை சான்று வந்துள்ளது. நான் அனுப்பிய புகாரிலேயே இதுபோல் விதி மீறிய திருச்சி மாவட்டம்

ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான உயர்நீதிமன்ற வழக்கை சுட்டிக் காட்டியதோடு, இது சம்மந்தமாக நாளிதழ்களில் வந்த செய்தியையும் இணைத்திருந்தேன். மேலும் விதிமீறிய கட்டிடத்தை உடனடியாக இடிப்பது தான் சட்டம் என்ற உயர்நீதிமன்றத்தின் உ.த்தரவையும் சுட்டிக் காட்டி இருந்தேன்.

நான் 23.2.2023இல் அனுப்பிய புகாருக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் 11.4.2023 இல் தலைமைச் செயலாளருக்கு புகார் அனுப்பி, அவர் உத்தரவின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் உத்தரவின் கீழ் விசாரணை நடத்திய காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் விதியை மீறி ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று அறிக்கை அளித்ததோடு, மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்க அனுப்பியதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரின் அறிக்கையின்படி விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தை இடித்து விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அனைத்து அரசு அலுவலர்கள் மீதும், குறிப்பாக கடமை தவறிய மாநகராட்சி ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் அறிக்கைக்கு மாறாக பொய்யான அறிக்கை அளித்த காஞ்சிபுரம் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் கடிதத்தையும் இணைத்து, விதிமீறியதாக காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் துணை இயக்குநரின் அறிக்கையை இணைத்து கடந்த 7.11.2023 இல் தலைமைச் செயலாளருக்கு புகார் அனுப்பி அதன் நகலை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கும் அனுப்பினேன். என் புகாரை 8.11.2023 இல் பெற்று கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. (7.11.2023 இல் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய புகார் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது). மேலும் நான் தலைமைச் செயலாளருக்கு 7.11.2023 இல் அனுப்பிய புகாரிலேயே மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் 13.4.2023 இல் என் புகார் மீது நடவடிக்கை எடுக்க ஆணையருக்கு கடிதம் அனுப்பியும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் விதிமீறிய கட்டிடத்திற்கு ஆதரவாக மாநகராட்சி ஆணையர் கையூட்டு வாங்கி இருப்பார் என்கிற சந்தேகம் எழுகின்றது என்று கூறி இருந்தும் நான் கையூட்டு வாங்கியது உண்மை தான் என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்கிற தைரியத்தில் தான் இதுவரை ஆணையர் விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது. மேலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அறிக்கையில் 2வது தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்று கூறிய நிலையில் நகரமைப்பு ஆய்வாளர் 2வது தளம் கட்ட அனுமதி வழங்கியதாக கூறியதால் நகரமைப்பு ஆய்வாளர் உறுதியாக லஞ்சம் பெற்றுள்ளார் என்று நான் கூறியது உண்மை என்று நிரூபணமாகின்றது.

எனவே, அனுமதியின்றி கட்டிடம் கட்டினால் அதை தாமதமின்றி உடனடியாக இடிக்க வேண்டும் என்பது தான் சட்டம் என்றும், அனுமதியின்றி செயல்படும் கட்டிடத்தை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மாநகராட்சி அதிகாரிகளையே சாரும் என்று பல்வேறு வழக்குகளில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறியதோடு, இதுபோல் அனுமதியின்றி கட்டிடம் கட்டும் வரை வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசுக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதை தங்களின் கவனத்திற்கு தெரிவிப்பது எனது கடமையாகும்.

எனவே அனுமதியின்றி விதியை மீறி காஞ்சிபுரம் பிரதான சாலையில் அதுவும் 30 கோடி மதிப்பில் ஒரு பிரமாண்டமான கட்டிடம் கட்டும் வரை மாநகராட்சி வேடிக்கை பார்த்துள்ளது என்பது காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் அறிக்கையில் இருந்து தெரிகிறது. விதிமுறைகளை முற்றிலும் அப்பட்டமாக மீறி ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடம் சில ஆண்டுகளாக செயல்படுவதோடு, தினசரி 1 லட்சம் வருமானம் ஈட்டி வருவதை வேடிக்கை பார்க்கும் மாநகராட்சியின் செயலை பார்க்கும் போது மிகப் பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. மேலும் இந்த சட்ட விரோத கட்டிடம் இயங்குவதை பார்க்கும் பொது மக்கள் சட்டம் என்பது சாதாரண மக்களுக்கு மட்டும் தான் என்றும், வசதி படைத்த பணக்காரர்களை ஒன்றும் செய்யாது என்று நினைப்பதோடு, சாதாரண எளிய மக்கள் சட்டத்தை பார்த்து பயப்படுவதும், வசதி படைத்தவர்களை பார்த்து சட்டம் பயப்படுகின்றதோ என்றும் நினைக்கின்றார்கள்.

எனவே, காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடம் எந்த ஒரு விதியையும் பின்பற்றாமல் முழுவதும் அப்பட்டமாக விதிமீறி சட்ட விரோதமாக கட்டி உள்ளதாக காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனரின் அறிக்கையின் அடிப்படையிலும், அனுமதியின்றி கட்டிடம் கட்டினால் அதை உடனடியாக இடிக்க வேண்டியது என்பது தான் சட்டம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறிய உத்தரவின் அடிப்படையிலும், மேலும் விதி மீறிய கட்டிடத்தை இடிக்க வேண்டிய கடமை மாநகராட்சி ஆணையருக்கு இருப்பதாலும், விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தை முழுவதும் இடித்து, விதிமீறிய கட்டிடத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதோடு, விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி ஆணையர், பொய்யான அறிக்கை அளித்த நகரமைப்பு ஆய்வாளர் மீது சட்டப்படி, நியாயப்படி, சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொருபால் கோடமை சான்றோர்க்களி என்ற குறள் வழியில் நீதி வழங்கி உதவி புரியுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 05.01.2024, 27.08.2024 நாளிட்ட கடிதங்கள் மற்றும் 18.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அதன் பின்னர் 13.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாகவும் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண் 2228/2025/எப்1, நாள் 21.05.2025 மற்றும் 18.6.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண் 4, பிளாக் எண் 11, நகரளவு எண் 829/2, பழைய கதவு எண் 3A, 3B வைகுண்ட பெருமாள் கோயில் தெருவில் ஏற்கனவே இருந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தடையின்மை சான்று பெற்று, நகர் ஊரமைப்புத் துறை உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் திட்ட அனுமதி எண் 08/2018 மனை ஒப்புதல் கட்டிட அனுமதி எண் 133/2018 நாள் 12.07.2018ம் தேதிய உத்தரவின்படி 8.64 மீட்டர் உயரத்தில் தரைக்கீழ் தளம் 276.61 ச.மீ. தரைத்தளம், 246.87 ச.மீ. மற்றும் முதல் தளம் 276.63 ச.மீ. அளவுகளில் வணிக உபயோக கட்டிடம் கட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2018/00247 நாள் 10.01.2018–ன்படி கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை அறிவிப்பு KSC No.8(A)/724, நாள் 22.02.2021–ன்படி மேற்படி இடத்தில் அனுமதிக்கப்பட்ட உயரத்தைவிட கூடுதல் உயரத்தில்

இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்படும் கட்டுமான பணிகளை நிறுத்தக் கோரி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக அறிவிப்பு நாள் 25.03.2021 மூலம் கட்டிட உரிமைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மற்றும் நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல் வரைபடம் மற்றும் அறிவிப்பு நகல்கள் ஆகியவை இத்துடன் இணைத்து பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். மேலும் 18.06.2025 நாளிட்ட கடிதத்தில், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் ஏற்கனவே 21.05.2025ல் தெரிவித்துள்ளதையே குறிப்பிட்டு, அதன் தொடர்ச்சியாக Deviation Notice No.01/2025/F1 நாள் 21.05.2025ல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம் மாநகராட்சியின் மேற்கண்ட அறிவிப்புகளுக்கு கட்டிட உரிமையாளர் பின்வருமாறு விளக்கம் தெரிவித்துள்ளார்:

> "கட்டட அனுமதிக்கு கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்பட்டதால் திருத்திய கட்டட அனுமதி வரைப்படத்திற்கு அனுமதி கோரி இந்திய தொல்பொருள் ஆய்வு துறை, சென்னை அவர்களுக்கும், நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கும் இணையவழி மூலமாக கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது."

அதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக அறிவிப்பு மூலம் கட்டிட உரிமையாளர் கடிதத்தில் தெரிவித்துள்ள இணைய வழி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கக் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

> "தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதியில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தை ஆய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடத்தை அகற்ற வேண்டி நான் கடந்த 23.02.2023 இல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் அனுப்பி, அதன் நகலை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் அனுப்பியுள்ளேன்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரின் அறிக்கையின்படி விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அனைத்து அரசு அலுவலர்கள் மீதும், குறிப்பாக கடமை தவறிய மாநகராட்சி ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அறிக்கையில் 2வது தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்று கூறியதற்கு மாறாக நகரமைப்பு ஆய்வாளர் 2வது தளம் கட்ட அனுமதி வழங்கியதாக கூறியிருப்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது.

பல்வேறு வழக்குகளில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறியதோடு, இதுபோல் அனுமதியின்றி கட்டிடம் கட்டும் வரை வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசுக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதை தங்களின் கவனத்திற்கு தெரிவிப்பது எனது கடமையாகும்.

எனவே, காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடம் எந்த ஒரு விதியையும் பின்பற்றாமல் முழுவதும் அப்பட்டமாக விதிமீறி சட்ட விரோதமாக கட்டி உள்ளதாக காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனரின் அறிக்கையின் அடிப்படையிலும், அனுமதியின்றி கட்டிடம் கட்டினால் அதை உடனடியாக இடிக்க வேண்டியது என்பது தான் சட்டம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறிய உத்தரவின் அடிப்படையிலும், விதிமீறிய ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி விதிமீறிய கட்டிடத்தை முழுவதும் இடித்து, விதிமீறிய கட்டிடத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதோடு, நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி ஆணையர், பொய்யான அறிக்கை அளித்த நகரமைப்பு ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. காஞ்சிபுரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

"காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண் 4, பிளாக் எண் 11, நகரளவு எண் 829/2, பழைய கதவு எண் 3A, 3B வைகுண்ட பெருமாள் கோயில் தெருவில் ஏற்கனவே இருந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தடையின்மை சான்று பெற்று, நகர் ஊரமைப்புத் துறை உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் திட்ட அனுமதி எண் 08/2018 மனை ஒப்புதல் கட்டிட அனுமதி எண் 133/2018 நாள் 12.07.2018ம் தேதிய உத்தரவின்படி 8.64 மீட்டர் உயரத்தில் தரைக்கீழ் தளம் 276.61 ச.மீ. தரைத்தளம், 246.87 ச.மீ. மற்றும் முதல் தளம் 276.63 ச.மீ. அளவுகளில் வணிக உபயோக கட்டிடம் கட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2018/00247 நாள் 10.01.2018–ன்படி கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை அறிவிப்பு KSC No.8(A)/724, நாள் 22.02.2021–ன்படி மேற்படி இடத்தில் அனுமதிக்கப்பட்ட உயரத்தைவிட கூடுதல் உயரத்தில் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்படும் கட்டுமான பணிகளை நிறுத்தக் கோரி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக அறிவிப்பு நாள் 25.03.2021 மூலம் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேலும், மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக Deviation Notice No.01/2025/F1 நாள் 21.05.2025ல் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாநகராட்சியின் மேற்கண்ட அறிவிப்புகளுக்கு கட்டிட உரிமையாளர் பின்வருமாறு விளக்கம் தெரிவித்துள்ளார்:

> "கட்டட அனுமதிக்கு கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்பட்டதால் திருத்திய கட்டட அனுமதி வரைப்படத்திற்கு அனுமதி கோரி இந்திய தொல்பொருள் ஆய்வு துறை, சென்னை அவர்களுக்கும், நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கும் இணையவழி மூலமாக கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது."

அதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக அறிவிப்பு மூலம் கட்டிட உரிமையாளர் கடிதத்தில் தெரிவித்துள்ள இணைய வழி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணபத்தின் நகல்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண் 4, நகரளவு எண் 829/2, பழைய கதவு எண் 3A, 3B வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் விதி மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டடம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் நகரம், சர்வே வார்டு எண் 4, பிளாக் எண் 11, நகரளவு எண் 829/2, பழைய கதவு எண் 3A, 3B வைகுண்ட பெருமாள் கோயில் தெருவில் ஏற்கனவே இருந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தடையின்மை சான்று பெற்று, நகர் ஊரமைப்புத் துறை உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் திட்ட அனுமதியின்படி, 8.64 மீட்டர் உயரத்தில் தரைக்கீழ் தளம் 276.61 ச.மீ. தரைத்தளம், 246.87 ச.மீ. முதல் தளம் மற்றும் 276.63 ச.மீ. அளவுகளில் வணிக உபயோக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை அறிவிப்பு KSC No.8(A)/724, நாள் 22.02.2021–ன்படி மேற்படி இடத்தில் அனுமதிக்கப்பட்ட உயரத்தைவிட கூடுதல் உயரத்தில் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்படும் கட்டுமான பணிகளை நிறுத்துவதற்கு காஞ்சிபுரம் மாநகராட்சி கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், ஆனால், நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர் பணியிடம் காலியாக இருந்ததால், தொடர் நடவடிக்கை எடுக்க இயலாமல் போனது என்பதும், தற்போது தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட

சட்டம் 35/2022), பிரிவு 135(1)—ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக Deviation Notice வழங்கப்பட்டது என்பதும், இதற்கு, மேற்கண்ட கட்டிடம் அனுமதிக்கு கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்பட்டதால் திருத்திய கட்டட அனுமதி வரைப்படத்திற்கு அனுமதி கோரி சென்னை, இந்திய தொல்பொருள் ஆய்வு துறைக்கும் மற்றும் நகர் ஊரமைப்பு துறை இயக்குநருக்கும் இணையவழியாக கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கட்டிட உரிமையாளர் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி, உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளர் (திட்டம்)—ன் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண் 4, பிளாக் எண் 11, நகரளவு எண் 829/2, பழைய கதவு எண் 3A, 3B வைகுண்ட பெருமாள் கோயில் தெருவில் ஏற்கனவே இருந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு, இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தடையின்மை சான்று பெற்று, நகர் ஊரமைப்புத் துறை உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் திட்ட அனுமதியின்படி, வணிக உபயோக கட்டிடமான ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அனுமதிக்கு மாறாக இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்பட்ட கட்டுமான பணிகளை நிறுத்துவதற்கு காஞ்சிபுரம் மாநகராட்சியால், கட்டிட உரிமையாளருக்கு 25.03.2021 அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தாலும், தொடர் நடவடிக்கை எடுக்காமல், மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 135/1—ன்கீழ் 21.05.2025—ல் காலம் கடந்து Deviation Notice வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. இருப்பினும், மேற்கண்ட காஞ்சிபுரம் மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் ஆகியவற்றிற்கு திருத்திய கட்டிட அனுமதி, வரைபட அனுமதி கோரி, சென்னை, இந்திய தொல்பொருள் ஆய்வு துறைக்கும் மற்றும் நகர் ஊரமைப்பு துறை இயக்குநருக்கும் இணையவழியாக கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கட்டிட உரிமையாளர் தெரிவித்த நிலையில், அது குறித்த ஆணையினை விரைவில் சமர்ப்பிக்குமாறு கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது அளித்து, மேற்படி அலுவலகங்களிலிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில், உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை எடுக்குமாறு, காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு ஸ்ரீராம்ஸ் ரெசிடென்சி கட்டிடத்தில், இரண்டாவது தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்று நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தெரிவித்த நிலையில், காஞ்சிபுரம் நகரமைப்பு ஆய்வாளர் 2வது தளம் கட்ட அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்து இருப்பதால், இம்முரண் குறித்து உரிய விளக்கம் பெற்று, மேற்கண்ட கட்டிடம் கட்டிட அனுமதியின்படி அமைந்துள்ளதா என்பதனை ஆய்ந்தறிந்து, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற் கொண்டு, அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும், காஞ்சிபுர நகரமைப்பு ஆய்வாளர், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளித்துள்ள 05.04.2023 நாளிட்ட தகவலில் இரண்டாம் தளத்திற்கு 336.57 ச.மீ. அளவுகளில் வணிக உபயோக கட்டிடம் கட்ட அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்திருந்தாலும், 24.06.2025 அன்று அளித்த வாக்குமூலத்தில் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டிட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்திய தொல்லியல் துறையின்

வரையறைக்குள் விதிமீறி அமைந்துள்ள மேற்கண்ட கட்டிடம் குறித்து இதுநாள் வரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்திய அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை மேற்கொள்ளவும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக்நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.